355—

திருவையாறு அரசர் கல்லூரியில் தங்கும் விடுதி அமைத்தல்

***23112—**திரு. ப. கலியபெருமாள் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவையாறு தொகுதி, திருவையாறு பேரூராட்சியில் உள்ள அரசர் கல்லூரியில் ஆண்களுக்கு தங்கும் உணவு விடுதி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவையாறு அரசர் கல்லூரி ஒரு தனியார் கல்லூரியாகும். எனவே, கல்லூரி நிர்வாகம், ஆண்களுக்கு தங்கும் விடுதி அமைக்க முன் வந்தால், அதை அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும்.

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லாமல் அரசு அதைப் பரிசீலிக்கும் என்று சொன்னதற்கு மிகவும் நன்றி. மேலும் திருவையாறு எந்த அளவுக்கு சிறப்புக்குரியது என்பதில், அங்கே அந்த அரசர் கல்லூரியும் ஒன்று. அது அங்கே 115 ஆண்டுகளுக்கு முன்னாலே நிறுவப்பட்டது. அங்கே புலவர் பட்டங்கள் பெற்று பல பகுதிகளிலே தமிழ் இலக்கியங்களைப் பயிற்றுவித்த பெருமை அந்தக் கல்லூரிக்கு உண்டு. அங்கே கலை, பரத நாட்டியம், இசை மற்றும் உலகத்திலேயே இல்லாத நாதஸ்வரப் பயிற்சி அந்தக் கல்லூரியில்தான் பயிற்றுவிக்கப்படுகிறது. 9-4-1995 ஆம் நாள் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்களும் அந்தக் கல்லூரியின் ஆண்டு விழாவிற்கு வருகை தந்தபோது அங்கே இருந்த மாணவர்களும் ஆசிரியர்களும், பொதுமக்களும் இதைக் கோரிக்கையாக வைத்தார்கள். அங்கே பெண்கள் தான் அதிகமாக படிக்கிறார்களே தவிர

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. ப. கலியபெருமாள் : ஆண்கள் அதிகமாகப் படிப்பதில்லை. அவர்கள் தங்குவதற்கோ அல்லது அவர்கள் உணவு உட்கொள்வதற்கோ சரியான வாய்ப்பு இல்லாத காரணத்தினால் அங்கே மாணவர்கள் வருவதில்லை. அந்த நிலையைப் போக்குவதற்கு, அந்தக் கல்லூரிக்காக கட்டிடம் கட்டுவதற்கு இடம் கையகப்படுத்தப்பட்டு இருக்கிறது; அதை வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நேரிலே பார்த்தார்கள். அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அந்த மாணவர்கள் அதிக அளவில் வந்து தங்கிப் படிப்பதற்கு, அந்த கையகப்படுத்திய நிலத்திலே அந்த விடுதி கட்டுவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாறு தொகுதி, திருவையாறு பேரூராட்சியில் உள்ள கல்லூரி அரசர் கல்லூரி; அது அரசு கல்லூரி அல்ல. அது ஒரு உதவி பெறும் தனியார் கல்லூரியாக இருக்கிறது. கல்லூரி நிர்வாகம் மாணவர்களுக்கு தங்கும் உணவு விடுதி அமைக்க முன் வந்து, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டால், தேவைப்படும் மொத்தத் தொகையில் பாதித் தொகையை அரசு இரு தவணைகளில் அளிக்கும் திட்டம் தற்போது நடைமுறையில் உள்ளது. இது குறித்த விண்ணப்பம், கல்லூரி நிர்வாகத்திடம் இருந்து உரிய முறையில் கிடைக்கப்பெற்றால், தேவை மற்றும் முன்னுரிமை அடிப்படையில் பரிசீலித்து அரசு மேல் நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 356, திரு. வீ. சுப்பிரமணியன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

356—

கண்டமங்கலம் ஒன்றியத்தில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***22664—**திரு. வீ. சுப்பிரமணியன் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கண்டமங்கலம் ஒன்றியம், சின்னகுப்பம், பக்கிரிமேடு, உப்புமுத்தாம்பாளையம் ஆகிய கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கண்டமங்கலம் ஒன்றியம், சின்னகுப்பம், பக்கிரிமேடு, உப்புமுத்தாம்பாளையம் ஆகிய இடங்களுக்குக் கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வீ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்து உள்ளார்கள். பல்வேறு சோதனைகளை சாதனைகளாக ஆக்கி நெஞ்சை உயர்த்தி பொற்கால ஆட்சி நடத்திவரும், நான் வணங்கும் தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்பாத மலர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக ஆக்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். வினாவில் குறிப்பிட்டுள்ள அந்த 3 கிராமங்களும் பஞ்சமாதேவி மற்றும் பூவரசன் குப்பம் ஆகிய இரண்டு